


**02.01. 2025**

தலைப்புச் செய்திகள்

- மின்னணு வர்த்தகத்தில் **ONDC** வணிக இணையதளம் முக்கிய பங்காற்றியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

- நாடோடி சமூகத்தினரின் வாழ்வாதார மேம்பாட்டு பணிகளில் அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் கூறியுள்ளார்.

- தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் இரண்டாயிரம் பெண்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- நீதிமன்றங்களின் வழிகாட்டுதலின்படியே தமிழகத்தில் வீட்டுமனைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாக மாநில வீட்டுவசதி துறை அமைச்சர் திரு.முத்துசாமி குறிப்பிட்டுள்ளார்.

- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான நடவடிக்கைகளை திமுக அரசு தாமதப்படுத்துவதாக பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர் மின்னணு வர்த்தகம்

சிறு வணிகத்திற்கு அதிகாரம் வழங்கி மின்னணு வர்த்தகத்தில் புரட்சியை ஏற்படுத்தியதில் திறந்தவெளி வர்த்தக மின்னணு இணையதளம் முக்கிய பங்காற்றியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வர்த்தக பிரிவில் வளத்தையும் வளர்ச்சியையும் இம்மின்னணு இணையதளம் உறுதி செய்திருப்பதாக தமது சமூகவலைதள பதிவில் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்னணு வர்த்தகத்தை பரவலாக்கும் வகையில் 2021ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட இந்த இணையதளத்தால், வணிகம் ஆளுமை பெற்றிருப்பதாகவும், சிறு தொழிலில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டிருப்பதாகவும் வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் சுட்டிக்காட்டியுள்ளார்.

விற்பனையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையிலான இடைவெளிகளை களைந்து மின்னணு வர்த்தகத்தை திறந்த வர்த்தக வலைதளம் முன்னெடுத்துச்செல்வதாகவும் குறிப்பிட்டார்.

**********

பிரதமர்

டெல்லியில் பல கோடி ரூபாய் பெருமான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை துவக்கிவைப்பதுடன் புதிய திட்டங்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

300 கோடி ரூபாய் மதிப்பிலான மத்திய கல்வி வாரியத்தின் ஒருங்கிணைந்த கட்டட வளாகம்,

குடிசை வாரிய மறு வாழ்வு திட்டத்தின் கீழ் ஆயிரத்து 700 புதிய குடியிருப்புகளை பயனாளிகளுக்கு வழங்குவது,

இரண்டு நகர்புற மேம்பாட்டுத்திட்டங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

டெல்லி பல்கலைகழகத்தில் 600 கோடி ரூபாய் மதிப்பிலான 3 புதிய திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

**********

வீரேந்திரகுமார்

புலம்பெயரும் நாடோடி சமூகத்தினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான பணிகளில் அரசு உறுதியுடன் இருப்பதாக மத்திய சமூக நலன் மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதுதொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் இச்சமூக மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மாநில அரசுகள் மத்திய அரசுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசின் நல திட்டங்கள் அவர்களை சென்றடையாதது, உரிய ஆவணங்கள் இல்லாததே காரணம் என்று எடுத்துரைத்தார்.

நாடோடி சமூகத்தினருக்கு கல்வியின் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர் இதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கை தரம் உயரும் என்றும் குறிப்பிட்டார்.

பல்வேறு காரணங்களால் பள்ளிபடிப்பை பாதியில் நிறுத்தும் மாணாக்கரை கண்டறிந்து அவர்களை மீண்டும் கல்வியை தொடர செய்யும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

**********

ராஜேந்திர விஸ்வநாத்

கேரள மாநிலத்தின் 23ஆவது ஆளுநராக திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் இன்று பதவி ஏற்றார்.

கேரள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இவ்விழாவில் அம்மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நித்தின் மதுக்கர் அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கேரள முதலமைச்சர் திரு.பிணராயி விஜயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

திரு.ராஜேந்திர விஸ்வநாத் பீகார் மாநில ஆளுநராக இதுவரை பணியாற்றினார்.

கேரளாவின் முன்னாள் ஆளுநர் திரு. ஆரீ்ஃப் முகமது கான் தற்போது பீகார் மாநில ஆளுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**********

குடியரசுதின டிக்கெட்

குடியரசுதின அணிவகுப்பு மற்றும் பாசறை திரும்பும் நிகழ்வுகளை பார்வையிடுவதற்கான நுழைவு சீட்டு விற்பனை இன்று நடைபெறுகிறது.

டெல்லியில் பல்வேறு இடங்களில் கவுண்டர் மூலம் டிக்கெட் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**Aamantran.mod.gov.in** இணையதளத்தின் மூலமும், **Aamantran** செயலி மூலமும் பொதுமக்கள் நேரடியாக வரும் 11ஆம் தேதிவரை டிக்கெட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்.

**********

முதலமைச்சர் திறன்மேம்பாடு

தமிழ்நாட்டில் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டாயிரம் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய முதலமைச்சர் மகளிர் உயர்கல்வியை உறுதி செய்ய பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

வாய்ஸ்

முன்னதாக சென்னை செம்மொழி பூங்காவில் 4ஆவது மலர் கண்காட்சியை முதலமைச்சர் இன்று துவக்கிவைத்தார்.

10 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில 30 லட்சம் வண்ண மலர்களால் வடிவமைக்கப்பட்ட யானை, பட்டாம்பூச்சி, தொடர் வண்டி அன்னப்பறவை போன்ற உருவங்களுடன் மிக்கி மவுஸ் கார்டூன் சித்திரமும் உருவாக்கப்பட்டுள்ளன.

**********

முத்துசாமி

தமிழ்நாட்டில் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தான் வீட்டுமனைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாக மாநில வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சிதுறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாநகராட்சி பகுதியில் மூன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, 10 வளர்ச்சி திட்ட பணிகளை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர், அண்ணா பல்கலைகழக விவகாரத்தில் காவல்துறை சில மணி நேரத்திலேயே கைது நடவடிக்கையை எடுத்துள்ளதால், சி.பி.ஐ விசாரணைக்கு அவசியமில்லை என்று குறிப்பிட்டார்.

காவல்துறையினர் சட்டம் ஒழுங்கு நிலமையை ஆய்வு செய்தே இதுதொடர்பான போராட்டங்களுக்கு அனுமதி வழங்கி வருவதாக அவர் கூறினார்.

**********

டோக்கன்

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் நாளைமுதல் வழங்கப்படுகிறது.

இதன்படி நியாயவிலைக்கடைகளில் காலை 100 பேருக்கும், மாலையில் 100 பேருக்கும் பரிசு தொகுப்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2 கோடியே 21 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒருகிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு உள்ளிட்டவை வழங்கப்படவுள்ளது.

பொங்கல் பண்டிகைக்கான அரசின் இலவச வேட்டி சேலைகளும் விநியோகத்திற்கா அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**********

அன்பில் மகேஷ்

தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் சென்னையில் இத்துறைக்கான ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

பள்ளிகல்வித்துறை மானியக்கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் செயலாக்கம் மற்றும் முன்னேற்றம் குறித்து அதிகாரிகள் அமைச்சரிடம் இதில் எடுத்துரைத்தனர்.

**********

அண்ணாமலை

தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான நடவடிக்கைகளை திமுக அரசு தாமதப்படுத்துவதாக பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் அண்ணா பல்கலைகழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொடர்புடையவர்கள் குறித்த தகவல்களை அரசு மறைக்க முயற்சிப்பதாக குறை கூறினார்.

**********

ராமதாஸ்

தமிழ்நாட்டில் காவல்துறை செயலிழந்துள்ளதாக பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டிவனத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டம் ஒழுங்கு விசயத்தில் மாநில அரசு கூடுதல் அக்கறை காட்ட வேண்டும் என்றும், காவல்துறையை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்றும் கூறினார்.

மாநிலத்தில் போதை பொருள் விற்பனை அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

அரசின் தோல்விகளை கண்டித்து போராட்டம் நடத்தும் எதிர்கட்சிகள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக அவர் குற்றம்சாட்டினார்.

500 அரசு பள்ளிகளை தனியார் பள்ளிகளின் வாயிலாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**********

டி.ஆர்.பி.ராஜா

மத்திய அரசின் தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட எடமேலையூரில் தூய்மை பணிகளை மேற்கொள்ள ஊராட்சிகளுக்கு பேட்டரி பொருத்தப்பட்ட ஆட்டோ வாகனம் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாருஸ்ரீ உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**********

இருவரி

மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடைபெறுவதை ஒட்டி பந்தக்கால் நடும் பணிகளில் மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு.மூர்த்தி, ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா உள்ளிட்டோர் இன்று பங்கேற்றனர்.

**********

சாக்லேட்

கொடைக்கானலில் தயாரிக்கப்படும் சாக்லேட்டுகளை அங்கு வரும் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்வதால் அதன் உற்பத்தி அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டை அருகே பொதுமக்களை அச்சுறுத்தி வந்த சிறுத்தைபுலி பிடிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

கடல் அரிப்பு

கடல் அரிப்பு காரணமாக திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் கடலில் நீராடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் உரிய விதிகளை பின்பற்றாமல் மருத்துவ கழிவுகளை வெளியேற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அபராதம் விதிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் எச்சரித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் மத்திய ரிசர்வ் காவல்படை பயிற்சி மையம் துவக்கப்பட்டு 57 ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் வகையில் பள்ளி மாணாக்கர் கலந்துகொண்ட சைக்கிள் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

கடலூர் மாவட்டம் அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியத்தில் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணிகளை ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

ஊரக வளர்ச்சி துறை திட்டங்களின் செயல்பாட்டையும் அவர் பார்வையிட்டார்.

**********

வானிலை

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழ்நாட்டின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி கொடைக்கானல் மலை பகுதிகளின் ஓரிரு இடங்களில் இரவு நேரத்தில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு இன்று செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********